குடித்தொகை புள்ளிவிபரத்திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி முட்டைகளின் உற்பத்தி 1977இல் 3800 இலட்சத்திலிருந்து 1978இல் 3600இலட்ச முட்டைகளாக 5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. சென்ற ஆண்டுபோல் விலங்குத் தீனிகளின் விலை உயர்ந்திருந்ததினுலும் உற்பத்தியாளர் இலாபம் குறைந்ததினுலும் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

**கைத்தொழில்**

இலங்கையின் தயாரிப்புக் கைத்தொழிலின் உற்பத்திப் பெறுமதி (தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய முக்கிய மரபுவழி வேளாண்மை ஏற்றுமதிகளுடனிணைந்த ஏற்றுமதித் தயாரிப்புக் கைத்தொழில்கள் தவிர) 1977இன் ரூ. 70,040 இலட்சத்திலிருந்து 1978இல் ரூ. 88510 இலட்சமாக, அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டின் 16 சதவீதத்துக்கெதிராக 26 சதவீத விரிவொன்றையும் பிரதிபலித்தது.[1] விலைமாற்றங்களை எதிரீடு செய்வதற்காக மொத்த விற்பனைவிலைச் சுட்டெண்ணினுல் சுருக்கப்பட்டபோது கைத்தொழில் வளர்ச்சியின் உண்மை வீதம் 1976இலும் 1977இலும் உள்ள 1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1978இல் 11 சதவீதமாக மதிப்பிடப்படலாம்.

1978இல் முன்னெப்பொழுதுமில்லாதவாறு குறிப்பிடத்தக்களவில் கைத்தொழில்கள் தோன்றியமையை 1977ஆம் ஆண்டு பொருளாதாரக் கொள்கைகளை மீள அமைத்ததின் காரணமாக இறுக்கமான கட்டுப்பாடுகளின் பின்னர் உள்நாட்டுக் கைத்தொழில் மீட்சிபெற்றது இயற்கையான விளைவெனக் கூறலாம். இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டமை மூலப் பொருட்களினதும் உதிரிப் பாகங்களினதும் கிடைக்கத்தக்க தன்மையை இலகுவாக்கியது. இதன் விளைவாக பதிவுகள் குறைக்கப்படுவதுடன் இயல் அளவுகள் மிகப் பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டன. இறக்குமதிகளில் குறைந்தளவு போட்டியிருப்பதற்குப் போட்டியுள்ள சூழ்நிலைகளின் தரத்தினை உயர்த்துவது தேவையான தொன்ருகும். கணிசமான இறக்குமதிப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருந்தும் குறிப்பிட்ட சில கைத்தொழில்கள் மிகவும் திறமையற்றனவாய் இருந்ததுடன் அவை வீழ்ச்சியுற்றன. இத்தகைய கைத்தொழில்கள் உயர்ந்த சமூக பொருளாதாரச் செலவில் எப்போதும் காத்துப் பேணப்பட வேண்டுமா என்பது பற்றி ஆராய்தல் நன்மை பயப்பதாகும். உயர்மட்டத் தொழில் வாய்ப்புக்கொண்ட கைத்தறிப் புடைவைக் கைத்தொழில்கள் பாதுகாப்பு வரிகள் நீக்கப்பட்டதன் காரணமாக உள்நாட்டுச் சந்தைக்கு மலிவானதும் தரமானதுமான புடைவைகளை வழங்குதல் என்ற முடிவின் விளைவால் மிகவும் கூடுதலான போட்டியுள்ள புடைவை இறக்குமதிகளுடன் கடுமையாகப் போட்டியிட வேண்டியிருந்தது. நுகர்வோரின் செலவில் கைத்தறிக் கைத்தொழிலில் தொடர்ந்து தொழில் வாய்ப்புக்கு உதவி செய்வது நீண்ட காலத்தில் உற்பத்தித் தரத்தினை குறைப்பதாக இருக்கும். ஏனெனில் இது குறைந்த மட்டத் திறனுக்கு ஊக்கமளிப்பதாக அமைகின்றது. எனவே உயர்ந்த தரமுள்ள உலக சந்தைக்கு வழங்குவதனை நோக்கமாகக்கொண்டு தொழில் நுட்பத்தையும், தரத்தினையும் சீர்திருத்துவது விரும்பத்தக்கதாகும்.

1978இல் அரசதுறைக் கைத்தொழில்களும், தனியார்துறைக் கைத்தொழில்களும் கணிசமானளவில் வளர்ச்சியடைந்தன. நடைமுறைப் பெறுமதி நியதிகளில் தனியார்துறைக் கைத்தொழில் வெளியீடு 30 சதவீதத்

---

1 கடந்த காலத்தை போன்று உள்நாட்டுக் கைத்தொழிலின் பெரும் பகுதியினை அடக்கியுள்ள ஏறக்குறைய 1500 கைத்தொழில் நிறுவனங்களின் மீது மத்தியவங்கியால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டினடிப்படையில் இத்தரவு அமைந்துள்ளது.

தால் விரிவடைந்த வேளையில், அரசதுறை வெளியீடு 26 சதவீதத்தால் அதிகரித்தது. கடந்த ஆண்டில் ஏறக்குறைய 61 சதவீதமாயிருந்த பயன் பாட்டுத்திறன் 1978இல் 70 சதவீதமாக அதிகரித்தது. கைத்தொழிலில் தொழில் வாய்ப்பு ஏறக்குறைய 15 சதவீதத்தாலும் (தனியார்துறையில் 17 சதவீதத்தாலும்) அரசதுறையில் 13 சதவீதத்தாலும் அதிகரித்தன. கைத் தொழில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் பயன்பாடு 1977இன் 66 சதவீதத்திலிருந்து 1978 இல் 79 சதவீதமாக அதிகரித்தது. இது பெரும்பாலான மூலப்பொருட்களை இறக்குமதி உரிமச் சான்றிதழிலிருந்து விலக்களிப்பதற்கான தவிர்க்கமுடியாத குறுங்கால அபிவிருத்தியாகும். இதன் பின் அளவுக் கட்டுப்பாடுகளன்றி இறக்குமதி வரிகள், உள்நாட்டு மூலப் பொருள்களினுல் இறக்குமதிகளைப் பதிலீடு செய்வதை ஒப்பிடத்தக்க பய னுள்ள வேளைகளில் ஊக்கப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

கைத்தொழில் அமைச்சின்படி கைத்தொழில் ஏற்றுமதிகள் (பெற்ரோலி யம் உள்ளடங்க ஆனுல் இரத்தினக்கற்கள் தவிர) நடைமுறை விலைகளில் 1978இல் ஏறக்குறைய இரு மடங்காக ரூ. 19,630 இலட்சமாகியது. ஆனுல் செலாவணி வீதத்தின் மாற்றங்களுக்காக சுருக்கப்பட்டபோது இது ஏறக் குறைய 13 சதவீத அதிகரிப்புக்கு வகை கூறியது. மிகப் பெரிய களுக்கு, மட்பாண்ட உற்பத்திகள், புடைவைகள், தயாரிக்கப்பட்ட ஆடை கள், கைப்பணிப் பொருட்கள், தயாரிக்கப்பட்ட உணவுகள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளே காரணமாயிருந்தன. கைத்தொழில் உற்பத்தியில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டதென்பதும் குறிப்பிடக்கூடியதாகும்.

1978இல் பலவிதமான தயாரிப்புத் துறைகளின் வளர்ச்சியின் அமைப்பு தனது போக்கில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்தைக்காட்டியது. கீழேயுள்ள அட்டவணை இந் நிலைமையை விளக்குகிறது.

அட்டவணை 1.6

**கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 1976 - 1978**

| கைத்தொழிற் தொகுதி | உற்பத்தியின் பெறுமதி (ப. இ. ரூபாவில்) | | |
|---|---|---|---|
| | 1976 | 1977 | 1978 |
| 1. உணவு, குடிபானமும் புகையிலையும் ... | 1,715 | 2,294 | 2,609 |
| 2. புடவைகள, அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும் | 680 | 698 | 1,008 |
| 3. தளபாடங்களை உள்ளடக்கி மரமும் மரஉற்பத்திகளும் ... | 129 | 127 | 124 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் ... | 203 | 270 | 376 |
| 5. இரசாயன, பெற்ரோலிய, கரி, இறப்பரும் பிளாதிக்கு உற்பத்திகளும் ... | 2,336 | 2,469 | 3,279 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி பெற்ரோலியமும் கரியும் தவிர்ந்த ... | 360 | 411 | 592 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 138 | 132 | 219 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், ... | 474 | 571 | 590 |
| பொறியும், போக்குவரத்துக் கருவிகளும் 9. உற்பத்திகள் (வேறு எங்கும் குறிப்பிடாதவை) ... | 26 | 34 | 55 |
| மொத்தம் ... | 6,061 | 7,004 | 8,851 |
| வளர்ச்சியின் உண்மையான வீதம் (%) ... | 1.2 | 1.3 | 10.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நடைமுறைப் பெறுமதி நியதிகளின்படி 1978 இல் முக்கிய வளர்ச்சித் துறையானது அடிப்படை உலோக உற்பத்திகள் (66 சதவீதம்) புடைவைகள் ஆடைகள் தோல் என்பன (44 சதவீதம்) உலோகமில்லா கனிப்பொருள் உற்பத்திகள் (44 சதவீதம்) தாள் (39 சதவீதம்) இரசாயனங்கள் (33 சதவீதம்) என்பனவாகும். இதற்கெதிராகக் கடந்த ஆண்டில் வளர்ச்சியடைந்த துறைகள் உணவும்,குடிபானமும், தாளும், தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் இயந்திரமும், கருவியும், என்பனவாகும். உணவும் குடிபானமும் கைத்தொழிலின் வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவான போக்குக்கு நிரம்பலில் ஏற்பட்ட சிக்கல்களும் (எடுத்துக் காட்டாக இறைச்சி பால் சர்க்கரை ஆகியன) சில இறக்குமதிப் போட்டிகளுமே காரணமென்பது வெளிப்படையாகும். தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறியும் கருவியும் (எடுத்துக் காட்டாக, வெட்டுக் கருவிகள், மட்பாண்டங்கள், உந்து உதிரிப்பாகங்கள், பொறிக் கருவிகள்) ஆகியன இறக்குமதிப் போட்டியின் காரணமாகத்தான் பின்னடைந்தனவாகக் காணப்படுகின்றன.

மேலே கூறப்பட்ட விரிவடைந்த துறைகளின் நடைமுறைப் பெறுமதிகளிலான வளர்ச்சி வீதங்கள் வளர்ச்சியின் உண்மையான வீதம் அறியப்படுமிடத்து விலை மாற்றங்களுக்காகச் சுருக்கப்படல்வேண்டும். இத்துறையில் வெளியீட்டைச் சுருக்குவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சுட்டெண் இல்லாமையால் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் துணைத் துறைச் சுட்டெண் ஒரு சுருக்கக் கருவியாகப் பயன்படலாம். இவ்வாறு சீராக்கம் செய்யப்பட்டபோது அடிப்படை உலோக உற்பத்திகள் துறை 43 சதவீதத்தாலும், இரசாயனங்கள் 29 சதவீதத்தாலும் தாள் 10 சதவீதத்தாலும் புடைவைகளும் ஆடைகளும் 3 சதவீதத்தாலும் விரிவடைந்தன, உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தித்துறைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய சுருக்கக் கருவியொன்று இல்லாதவிடத்து, சீமெந்து விலைகளில் ஏற்பட்ட மாற்றத்தினால் ஏற்பட்ட சுருக்கம் (சீமெந்து இத்துறையின் வெளியீட்டில் மூன்றிலொரு பங்குக்கும் அதிகமாக வகை கூறியது) ஏறக்குறைய 22 சதவீதமான உண்யான வளர்ச்சியொன்றைக்காட்டுகின்றன.

அடிப்படை உலோக உற்பத்திகளின் வளர்ச்சிக்கு, உருக்குக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டிலேற்பட்ட கணிசமான விரிவே முழுக் காரணமாகும். உலோகமல்லா உற்பத்தித் துறையின் விரிவுக்கு, சீமெந்து செங்கட்டி, ஓடு ஆகியவற்றின் உற்பத்தியிலேற்பட்ட பெருமளவு அதிகரிப்பே காரணமாகும். இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு துறைகளில் பெற்றோலியம் டயர், இறப்பர், ஆகிய கைத்தொழில்களிலேயே அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. தாளும், தாள் உற்பத்திகள் தொகுதியின் வெளியீட்டு வளர்ச்சியானதுதாள் கூட்டுத்தாபனத்தின் உயர்ந்த வெளியீட்டினாலும், இறக்குமதிகள் தளர்த்தப்பட்டபின் தாள் உற்பத்திக் கைத்தொழிலின் ஏற்பட்ட புத்தெழுச்சியினாலும் ஏற்பட்டதாகும். புடவைகள், ஆடைகள், தோல் உற்பத்திகள் ஆகிய துறையின் மிகப் பெரிய தயாரிப்புக்கூறுகளின் வெளியீட்டிலேற்பட்ட அதிகரிப்பு சிறுகைத்தொழில் வெளியீட்டின் வீழ்ச்சியொன்றை எதிரீடு செய்யக்கூடியதாயிருந்தது.

மரம், மர உற்பத்திகள் ஆகியவற்றின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சி இரண்டாவது ஆண்டிலும் தொடர்ந்து ஏற்பட்டமை கவலைக்குரியதாகும். இத்துறையில் முக்கியமான இரண்டின் அதாவது அரச மரக் கூட்டுத்தாபனம் இலங்கை ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினுற்பத்தி வீழ்ச்சி யொன்றைக் காட்டியது.

சென்ற ஆண்டின் ஆண்டறிக்கையில் குறிப்பிட்டபடி 1977இன் பொருளாதார சீர்திருத்தங்கள் கைத்தொழிற்றுறையில் மாற்றத்தை வலியுறுத்தும் முறையிலமைந்து, உயர்ந்த பாதுகாப்புக்குட்பட்ட இறக்குமதிப் பதிலீட்டமைப் பிலிருந்து ஏற்றுமதி அபிவிருத்திக்கு மாற்றமுற்றது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் (கொ.பெ. பொ. ஆ. கு.) கீழ் 200 சதுர மைல் கொண்ட எல்லைப் பரப்பில் ஏற்றுமதி உற்பத்திவலயங்களை நிறுவுவதே புதிய வழிமுறையின் முக்கிய பணியாகும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏற்று மதிக்கான கைத்தொழில்களில் உள்நாட்டுடன் இணைந்தோ இணையாமலோ இக் கைத்தொழில் வலயங்களில் முதலிடுமாறு கேட்கப்பட்டனர். ஒரு ஆண்டி லிருந்து 10 ஆண்டுவரையரான வரி விடுதலை, அதன் பின் சலுகையுடன்கூடிய மொத்த விற்பனைவரி, இறக்குமதி ஏற்றுமதித் தீர்வைகள், துறைமுகக் கட்ட ணங்கள் போன்ற வற்றிலிருந்து விலக்கு, உள்நாட்டுச் சந்தையில் மட்டுப் படுத்தப்பட்ட ஆனால் விரும்பியதைப் பெறக்கூடிய தன்மை, வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் செலாவணிக் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கு. ஆகிய கவர்ச்சிகரமான தூண்டல்கள் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. கொ. பெ. பொ. ஆ. கு. பகுதிக்கு வெளியே வெளிநாட்டு முதலீட்டை யொட்டிய கொள்கையானது தேர்ந்தெடுக்கப்படவேண்டியதொன்றாகவும் பொதுவாக இது ஏற்றுமதிப் பொருட்கள் கைத்தொழிலுக்கு அல்லது உள்ளூ ரில் குறிப்பிடத்தக்க தொழில் நுட்ப இடைவெளியுள்ள இடங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டதாகவுமிருந்தது. வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவொன்று (வெ. மு. ம. கு.) இத்தகைய முதலீடுகளைத் தணிக்கை செய்தது. ரூ. 700,000க் கும் அதிகமான மூலதன இறக்குமதித் தேவையைக் கொண்ட உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு, உரிமம் தேவைப்பட்டதுடன் அத்தகைய அனுமதி உள்நாட்டு முதலீட்டு மதிபுரைக்குழுவினால் (உ. மு. ம. கு.) வழங்கப்பட்டது.

1978 இல் தொடர்பான அதிகார சபைகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட கைத்தொழில்கள் பற்றிய தரவுகள் கீழேயுள்ள அட்டவணை 1.7 இல் தரப்பட் டுள்ளன.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ரூ.16,240 இலட்சம் முதலீட்டுடன் 52 கைத்தொழில்களுக்கு ஒப்புதல் வழங்கியது. இதில் 74 சத வீதமான தொகை வெளிநாட்டு முதலீடாகும். இவற்றில் வெளிநாட்டு முத லீட்டின் அரைப்பகுதியைப் பிரதிபலிக்கும் 32 கைத்தொழில்கள், புடவை களும், ஆடைகளும் ஆகிய பிரிவைச் சார்ந்ததாகும், இத்தகைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பெரிய சந்தைகளுக்கென ஏற்றுமதிகளை விரிவடையச் செய்வதில் அளவுக்கட்டுப்பாடுகளையும், ஏனைய கட் டுப்பாடுகளையும் எதிர்நோக்கிய நாடுகளிலிருந்து வந்துள்ளனர். அதேவேளையில் இலங்கை இந்நாடுகளுக்கு மேலும் ஏற்றுமதி விரிவுக்கான வாய்ப்பையும் வழங்கி யுள்ளது.

அட்டவணை 1.7

## கைத்தொழில்களில் முதலீடுகளுக்கான ஒப்புதல்கள்- 1978

| கைத்தொழிற் தொகுதி | கூறுகளின் எண்ணிக்கை | | | வெளிநாட்டுச் செலவு ரூ. ப. இ. | | | மொத்த முதலீடுகள் ரூ. ப. இ. | | | தொழில் வாய்ப்பு எண்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொ.பெ. பொ.ஆ. | வெ.மு. ம.கு. | உ. மு. ம.கு. | கொ.பெ. பொ. ஆ. | வெ.மு. ம.கு. | உ.மு.* ம.கு. | கொ.பெ. பொ.ஆ. | வெ. மு. ம.கு. | உ. மு. ம.கு. | கொ.பெ. பொ.ஆ. | வெ. மு. ம.கு. | உ. மு. ம. கு. |
| 1. உணவு குடிபானமும் புகையிலையும்... | — | — | 109 | — | — | 68 | — | — | 99 | — | — | 3,182 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் ... | 32 | 7 | 1,315 | 623 | 20 | 346 | 919 | 31 | 454 | 14,357 | 1,437 | 20,122 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் ... | — | — | } 184 | — | — | } 195 | — | — | } 200 | — | — | } 1,535 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் ... | 1 | — | | 6 | — | | 7 | — | | | — | |
| 5. இரசாயன பெற்றோலிய, கரி, | | | | | | | | | | 222 | | |
| இறப்பரும், பிளாத்திக்கு உற்பத்திகளும் ... | 7 | 11 | 347 | 47 | 24 | 133 | 75 | 36 | 179 | 9,681 | 528 | 7,092 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் ... | 2 | 1 | 126 | 497 | 9 | 16 | 583 | 21 | 21 | 832 | 78 | 2,262 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும், போக்குவரத்துக் கருவியும் ... | 3 | 2 | 304 | 10 | 21 | 91 | 16 | 33 | 108 | 555 | 342 | 9,120 |
| 9. உற்பத்திகள் (வேறு எங்கும் குறிக்கப்படாதவை) ... | 7 | — | — | 19 | — | — | 25 | — | — | 848 | — | — |
| மொத்தம் | 52 | 21 | 2,385 | 1,202 | 74 | 849 | 1,624 | 121 | 1,061 | 26,495 | 2,385 | 43,313 |

* செயற்றிட்டங்களின் வெளிநாட்டுச் செலவினைக் காட்டுகின்றன.

மூலங்கள்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (கொ. பெ. பொ. ஆ.)
வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழு (வெ. மு. ம. கு.)
உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழு (உ. மு. ம. கு.)

வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு ரூ. 1,210 இலட்சம்கொண்ட முத லீட்டுடன் 21 கைத்தொழில்களுக்கு ஒப்புதல் வழங்கியது, இதில் மூன்றில் இரண்டு பங்கு வெளிநாட்டு முதலீடாகும். இவற்றில் 11 நிறுவனங்கள், இரசாயனம், இறப்பர், பிளாத்திக்குத் துறையில் வெளிநாட்டு முதலீட்டின் 32 சதவீதத்துக்கும், 7 நிறுவனங்கள் புடைவைகள் ஆடைகள் துறையில் வெளிநாட்டு முதலீட்டின் மற்றெரு 27 சதவிதத்திற்கும் வகைகூறின. இவ் வாறு இக் கைத்தொழில்கள் உள்நாட்டுச் சந்தைகளையே பெரிதும் நாடின. உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவினுல் ஒப்புதலளிக்கப்பட்ட 2385 கைத் தொழில்களும் இதே நிலையைக் கொண்டிருந்தன என்று கூறலாம். இந்நிறு வனங்களில் கிட்டத்தட்ட 55 சதவீதமான அதாவது மொத்த முதலீட்டில் 43 சதவீதத்துக்கு வகைகூறுவன புடைவைகளும் ஆடைகளும் பிரிவைச் சேர்ந்த வைகள் ஆகும். முதலீட்டின் 27 சதவீதத்திற்கு வகை கூறும் 651 கைத் தொழில்கட்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. கொ. பெ. பொ. ஆ. குழு விற்கு வெளியே ஒப்புதல்கள் வழங்கப்பட்ட கைத்தொழில்களும், புடைவை ஆடை ஆகிய துறைகளை ஒட்டியனவாகவே இருந்தன. வெளிநாட்டு முத லீட்டு மதியுரைக் குழுவினுல் ஒப்புதல் வழங்கப்பட்ட கைத்தொழில்கள் ஏற் றுமதி ஒட்டியனவாக விளங்க உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினுல் ஒப்புதல்கள் வழங்கப்பட்ட கைத்தொழில்கள் பெரிதும் உள்நாட்டுச் சந்தை யை ஒட்டியிருந்தன. உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினுல் ஒப்புதல் வழங்கப்பட்ட கைத்தொழில்கள் சில இரசாயனம், பொறித் தொகுதி, நுண் கருவிகள் ஆகிய துறைகளில் மேலும் முன்னேற்றகரமான தொழில் நுட்பத் திணைக் கொண்டனவாக உள்ளன.

கொழும்பு நகரிலும் அதை சுற்றியுமுள்ள பகுதிகளிலும் பெரும் கைத் தொழில்கள் மிகச் செறிந்திருப்பது குறித்து மேலிடங்கள் கவலை கொண்டுள் ளன. உற்பத்திப் பெறுமதியில் 90 சதவீதத்துக்கு வகை கூறும் தயாரிப்புக் கைத்தொழிலில் 80 சதவீதத்துக்கு அதிகமானவையும் தொழிற்படையில் 81 சதவீதமானவையும் கொழும்பு மாவட்டத்திலமைந்துள்ளதாக அளவீடு காட் டுகிறது. மாநில அடிப்படையில் பெருமளவு சமனுன கைத்தொழிலை ஊக்கு விப்பதற்காகப் பல வகைப்பட்ட இறைச் சலுகைகளும், ஏனைய சலுகைகளும் திட்டமிடப்பட்டுள்ளன. ஆயினும் புதிய கைத்தொழிலின் அடித்தளம் சிறந் ததாகக் காணப்படவில்லை. அத்தகைய கைத்தொழில்களுக்கு மேற்கொள்ளப் பட்ட சலுகைகள் எல்லையளவு நன்மையே தரக்கூடும். எனவே, கொழும்பு மாவட்டத்துக்கு வெளியேயிருந்து முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான உள்ளமைப்புடன் கூடிய மாநில கைத்தொழில் நிலையங்களை அமைப்பதன்மூலம் கைத்தொழிலின் மாநிலப் பரவலை ஊக்குவித்தல் சிறந்த தாகும்.

**விலைகள்**

குடிமதிப்புப் புள்ளிவிபரத்திணைகளத்தினுல் தயாரிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் மத்திய வங்கியினுல் தயாரிக்கப்பட்ட மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் மட்டுமே பொருளாதாரத்தில் விலை மட்டங்களிலேற்படும் மாற்றங்களைக் காட்டுவதற்காக வெளியிடப்படும் குறி காட்டிகளாகும். முதற் கூறப்பட்டது சில்லறை விலைகளின் மாற்றங்களை அள விடுவதுடன் முன்னைய இரு ஆண்டுகளிலும் ஒவ்வொன்றிலும் 1.2 சதவீத மாக ஏற்பட்ட அதிகரிப்புக்கெதிராக 1978 இல் 12.1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இச் சுட்டெண்ணின் முக்கியமான குறைபாடு ஆண்டறிக்